SURA'S

TN-TET

Tamilnadu Teacher Eligibility Test

தமிழ்

தாள் – I & II

6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரையுள்ள பாடத்திட்டங்கள்

செ. சசிகலா தேவி, M.A., M.Phil(Tamil)., PGDLA

ஆசிரியர் தகுதித் தேர்வு
தமிழ் தாள் I & II
2026
2025
2023 & 2022
2019
2017
2013
2012 (மறுதேர்வு)
2012
ஒரிஜினல் வினாத்தாள்கள்
விளக்கமான விடைகளுடன்

சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்
சென்னை

E 254

© PUBLISHERS

Tamilnadu Teacher Eligibility Test

தாள் I & II ஆசிரியர்களுக்கு

ISBN: 978-93-6417-833-4

குறியீட்டு எண் : E 254

(வெளியீட்டாளர்களின் எழுத்து மூலமான அனுமதி இன்றி இப்புத்தகத்தை மறுபதிப்புச் செய்யவோ, வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவோ, அச்சடிக்கவோ, போட்டோகாபி செய்யவோ கூடாது)

சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்

தலைமை அலுவலகம்: 1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை-600 040. ☎ 91-44-4862 9977, 4204 3273

ஜி.டி. கிருஷ்ணா பிரஸ், சென்னை – 600 102–இல் அச்சடிக்கப்பட்டு,
சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்
1620, 'ஜே' பிளாக், 16–ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை – 600 040 இல்
திரு. வீ.வீ.கே. சுப்புராசு அவர்களால் வெளியிடப்பட்டது.
தொலைபேசி : 91–44–4862 9977
email: suracollege@gmail.com; enquiry@surabooks.com; website: www.surabooks.com

TN-TET- தாள் – I & II ஆசிரியர்களுக்கு

பொருளடக்கம்

பக்கம்

TN-TET ஒரிஜினல் வினாத்தாள்கள் விளக்கமான விடைகளுடன்
தாள்–I மற்றும் தாள்–II 2026 ..... 1 – 13

TN-TET ஒரிஜினல் வினாத்தாள்கள் விளக்கமான விடைகளுடன்
தாள்–I மற்றும் தாள்–II 2025 ..... 1 – 12

TN-TET ஒரிஜினல் வினாத்தாள்கள் விளக்கமான விடைகளுடன்
தாள்–I மற்றும் தாள்–II
2023, 2022, 2019, 2017, 2013, 2012 (மறுதேர்வு), 2012 ..... 1 – 44

தமிழ்

(6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரையுள்ள பாடத்திட்டங்கள்)

இலக்கண விளக்கவுரை 2 - 47

இலக்கணம் - பயிற்சி வினாக்கள் 48 - 64

செய்யுள் இலக்கியம் 65 - 154

உரைநடை இலக்கியம் 155 - 272

கூடுதல் தகவல் - பொதுத் தமிழ் 1 - 16

❖✳✳✳✳❖

Tamilnadu Teacher Eligibility Test (TN-TET)

தமிழ் பாடத்திட்டம்

தாள் - I & II

6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரையிலான தமிழ்நாடு அரசு பாடத்திட்டத்தின்படி உள்ள செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப்பாடம் ஆகியவற்றில் இருந்து கொள்குறி வகை வினாக்கள் கேட்கப்படுகின்றன.

தாள் I	வினாக்கள் 30	மதிப்பெண்கள் 30
தாள் II	வினாக்கள் 30	மதிப்பெண்கள் 30

- இலக்கணம் – 17 வினாக்கள் கேட்கப்படுகின்றன.
- செய்யுள் – 7 வினாக்கள் கேட்கப்படுகின்றன.
- துணைப்பாடம் மற்றும் உரைநடை – 6 வினாக்கள் கேட்கப்படுகின்றன.

தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு

ஒரிஜினல் வினாத்தாள் - 2026

காலம் : 3 மணி நேரம்
மதிப்பெண் : 150

தாள் - I

நாள் : 04.07.2026

Part II - தமிழ்

31. சாகும்போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும் –என்று பாடியவர்:

A) பாரதியார் B) க. சச்சிதானந்தன்
C) பாரதிதாசன் D) தேவநேயப் பாவாணர்

விளக்கம் : விடை (B)

"சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்" – இந்த புகழ்பெற்ற வரிகள் இலங்கையைச் சேர்ந்த தமிழறிஞரும் கவிஞருமான க.சச்சிதானந்தன் அவர்களால் எழுதப்பட்டது.

பொருள்: நான் இறக்கும் தருவாயிலும் தமிழ் மொழியைப் படித்துக்கொண்டே உயிர்விட வேண்டும்; எனது உடல் எரிந்து சாம்பலாகும் போதும், அந்தச் சாம்பலில் இருந்து தமிழ் மொழியின் மணம் வீச வேண்டும் என்று தனது தீவிரமான தமிழ் பற்றை இவ்வரிகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

பாரதியார்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" போன்ற புகழ்பெற்ற வரிகளைப் பாடியுள்ளார்.

பாரதிதாசன்

"தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாடிய புரட்சிக்கவிஞர் ஆவார்.

தேவநேயப் பாவாணர்

"தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான்" என்பது இவரின் கூற்று.

32. கூற்று (1) : கங்கை கொண்ட சோழபுரம் கோவில் விமானம் 34 அடி குறுக்களவு கொண்டது.

கூற்று (2) : இவ்விமானம் செங்கற்களால் கட்டப்பட்டது.

A) கூற்று (1) சரி கூற்று (2) சரி
B) கூற்று (1) தவறு கூற்று (2) தவறு
C) கூற்று (1) சரி கூற்று (2) தவறு
D) கூற்று (1) தவறு கூற்று (2) சரி

விளக்கம் : விடை (C)

இராஜேந்திரசோழன் தனது கங்கைப் படையெடுப்பு வெற்றியின் சின்னமாகக் 'கங்கை கொண்ட சோழபுரம்' கோயிலை அமைத்தார். இக்கோவிலின் விமானம் 180 அடி உயரம் கொண்டது. இது துண்டுக் கற்களால் அமைக்கப்பட்ட விமானம் ஆகும்.

கோவிலின் வாயில் தரை மட்டத்திலிருந்து 20 அடி உயரத்தில் இருப்பதே இதன் சிறப்பு. கோபுரத்தின் உச்சியில் இருப்பது மிகப்பெரிய வட்ட வடிவக் கல். அது 34 அடி குறுக்களவு கொண்டது.

எனவே கூற்று (1), (2) தவறு.

33. கூற்று : பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி, கால அளவு, வடிவம் முதலியவற்றில் சில எழுத்துகள் ஒத்துப்போகின்றன. அவற்றை இன எழுத்துக்கள் என்று கூறுவர்.

காரணம் : எல்லா இன எழுத்துகளும் சொல்லில் ஒன்றாகச் சேர்ந்து வரும்.

A) கூற்று தவறு காரணம் சரி
B) கூற்று சரி காரணம் தவறு
C) கூற்று சரி காரணம் சரி
D) கூற்று தவறு காரணம் தவறு

விளக்கம் : விடை (B)

கூற்று சரி:

தமிழ் இலக்கணத்தில், எழுத்துகள் பிறக்கும் இடம் மற்றும் ஒலிக்கும் முயற்சி ஆகியவற்றில் ஒற்றுமை உடைய எழுத்துகள் 'இன எழுத்துகள்' (நட்பு எழுத்துகள்) என்று அழைக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு: வல்லின எழுத்துகளுக்கு மெல்லின எழுத்துகள் இன எழுத்துகளாக அமைகின்றன (க் – ங், ச் – ஞ், ட் – ண், த் – ந், ப் – ம், ற் –ன்). எனவே, கொடுக்கப்பட்டுள்ள கூற்று சரியானது.

காரணம் தவறு :

கூற்றில் சொல்லப்பட்டவாறு எல்லா இன எழுத்துகளும் சொற்களில் எப்போதும் ஒன்றாகச் சேர்ந்து வருவதில்லை. மெல்லின மெய் எழுத்துகளைத் தொடர்ந்து பெரும்பாலும் அவற்றின் இனமாகிய வல்லின எழுத்துகள் சேர்ந்து வரும் (எ.கா: தங்கம், பஞ்சு, கம்பு, மன்றம்).

ஆனால், இடையின எழுத்துகள் ஆறிற்கும் (ய், ர், ல், வ், ழ், ள்) ஒரே இனமாக இருப்பதால் அவை இவ்வாறு இணைந்து வருவதில்லை. அதேபோல், உயிர் எழுத்துகளில் நெடில் எழுத்துகளுக்குக் குறில் எழுத்துகள் இன எழுத்துகளாகும். இவை செய்யுளில் அளபெடையில் மட்டுமே சேர்ந்து வரும், சாதாரண சொற்களில் ஒன்றாகச் சேர்ந்து வராது. எனவே, "எல்லா இன எழுத்துகளும் சொல்லில் ஒன்றாகச் சேர்ந்து வரும்" என்ற காரணம் தவறானது.

34. 'நிருமித்த' என்ற சொல்லின் பொருள்

A) நிரூபித்த B) சிறப்பித்த
C) உருவாக்கிய D) பாராட்டிய

விளக்கம் : விடை (C)

இன்பத் தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

– பாரதிதாசன்

இப்பாடலின் வரியான "இன்பத்தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!" என்பதில் 'நிருமித்த' என்ற சொல்லின் பொருள் 'உருவாக்கிய' என்பதாகும்.

35. பொருத்துக:

a) ஆழிக் கிணறு	i) கமலை நீர்ப்பாய்ச்சும் கிணறு
b) உறைக் கிணறு	ii) கடலருகே தோண்டிய கிணறு
c) கட்டுக் கிணறு	iii) மணற்பாங்கான இடத்தில் தோண்டிய கிணறு
d) பூட்டைக் கிணறு	iv) சரளை நிலத்தில் தோண்டிய கிணறு

(A) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)
(B) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
(C) (a)-(iii), (b)-(i), (c)-(ii), (d)-(iv)
(D) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)

SURA'S

விடை (A)

விளக்கம் :

நீர்நிலைகளின் தமிழ்ப் பெயர்கள்

ஆழிக் கிணறு – கடலருகே தோண்டிய கிணறு

உறைக் கிணறு – மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணறு

கட்டுக்கிணறு – சரளை நிலத்தில் தோண்டி கல், செங்கற்களால் அகச்சுவர் கட்டிய கிணறு

பூட்டைக் கிணறு – கமலை நீர் பாய்ச்சும் அமைப்புள்ள கிணறு

அகழி – கோட்டையின் புறத்தே அகழ்ந்தமைக்கப்பட்ட நீர் அரண்

அருவி – மலைமுகட்டுத் தேக்கநீர் குத்திட்டுக் குதிப்பது.

ஆறு – பெருகி ஓடும் நதி

இலஞ்சி – பல வகைக்கும் பயன்படும் நீர்த்தேக்கம்

ஊருணி – மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலை

ஊற்று – அடியிலிருந்து நீர் ஊறுவது

ஏரி – வேளாண்மைப் பாசன நீர்த்தேக்கம்

கடல் – சமுத்திரம்

கண்மாய் – பாண்டி மண்டலத்தில் ஏரிக்கு வழங்கப்படும் பெயர்

குண்டம் – சிறியதாய் அமைந்த குளிக்கும் நீர்நிலை.

குண்டு – குளிப்பதற்கேற்ற சிறுகுளம்

குமிழி ஊற்று – நீரானது நிலமட்டத்திற்கு மேல் கொப்புளித்து வரும் ஊற்று.

கேணி – அகலமும் ஆழமும் உள்ள பெருங்கிணறு

புனற்குளம் – நீர்வரத்து மடையின்றி மழைநீரையே கொண்டுள்ள குளிக்கும் நீர்நிலை.

36. பொருத்துக

a)	இயற்கை ஒவியம்	i)	கம்பராமாயணம்
b)	இயற்கை இன்பக்கலம்	ii)	பத்துப்பாட்டு
c)	இயற்கைப் பரிணாமம்	iii)	பெரியபுராணம்
d)	இயற்கை அன்பு	iv)	கலித்தொகை

A) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

B) (a)-(ii), (b)-(iv), (c)-(iii), (d)-(i)

C) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)

D) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)

விளக்கம் : விடை (C)

பத்துப்பாட்டு – இயற்கை ஒவியம்

கலித்தொகை – இயற்கை இன்பக்கலம்

கம்பராமாயணம் – இயற்கைப் பரிணாமம்

பெரியபுராணம் – இயற்கை அன்பு

மேலும் சில

திருக்குறள் – இயற்கை வாழ்வில்லம்

சிலப்பதிகாரம், மணிமேகலை – இயற்கை இன்ப வாழ்வு நிலையங்கள்

சீவகசிந்தாமணி – இயற்கைத் தவம்

தேவார, திருவாசக, திருவாய் மொழிகள் – இயற்கை இறையுறையுள்

37. சீர்களை வரிசைப்படுத்திக் குறளை எழுதுக.

A) நிறையுடைமை வேண்டின் பொறையுடைமை நீங்காமை போற்றி ஒழுகப் படும்.

B) நிறையுடைமை நீங்காமை பொறையுடைமை வேண்டின் போற்றி ஒழுகப் படும்.

C) நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை போற்றி ஒழுகப் படும்.

D) பொறையுடைமை நீங்காமை வேண்டின் நிறையுடைமை போற்றி ஒழுகப் படும்

விளக்கம் : விடை (C)

பொறையுடைமை

நிறையுடைமை நீங்காமை வேண்டின்

பொறையுடைமை போற்றி ஒழுகப் படும். – (குறள் 153)

பொருள்: நற்பண்புகள் (நிறையுடைமை) நம்மை விட்டு நீங்காமல் இருக்க வேண்டும் என நாம் விரும்பினால், பொறுமையைப் (பொறையுடைமை) போற்றிப் பின்பற்ற வேண்டும்.

38. கூற்று (1) : கேட்டல், பேசுதல் என்னும் முதல் நிலையிலேயே குழந்தைகளுக்குத் தாய்மொழி அறிமுகமாகிறது.

கூற்று (2) : படித்தல், எழுதுதல் என்னும் இரண்டாம் நிலையில் பிறமொழிகள் அறிமுகம் ஆவதில்லை.

A) கூற்று (1) சரி; கூற்று (2) சரி

B) கூற்று (1) சரி; கூற்று (2) தவறு

C) கூற்று (1) தவறு; கூற்று (2) தவறு

D) கூற்று (1) தவறு; கூற்று (2) சரி

விளக்கம் : விடை (B)

வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழியாகும். இவ்வாறு கேட்பதும் பேசுவதும் மொழியின் முதல் நிலை. ஒரு குழந்தை தன் தாய்மொழியைக் கேட்கத் தொடங்குவதிலும், பேசுவதிலும் தான் முதலில் கற்றுக் கொள்கிறது. மொழி கற்றலின் முதல் நிலைகளான கேட்டல், பேசுதல் மூலமே குழந்தைகளுக்குத் தாய்மொழி அறிமுகமாவது முற்றிலும் சரியானதாகும்.

கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது எழுத்துமொழியாகும். இவ்வாறு படிக்கப்படுவதும் எழுதப்படுவதும் மொழியின் இரண்டாம் நிலை. இந்த நிலையில் பள்ளிக்கூடத்திலோ அல்லது பிற சூழல்களிலோ மாற்று மொழிகளை (பிறமொழிகளை) ஒருவரால் எளிதாகக் கற்கவும் அறிமுகப்படுத்திக்கொள்ளவும் முடியும். ஆனால், இக்கூற்றில் பிறமொழிகள் அறிமுகம் ஆவதில்லை என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, கூற்று (1) சரி மற்றும் கூற்று (2) தவறு.

39. சரியான தொடரைக் கண்டறிக.

A) தவலை தண்ணீரில் குதித்தது.

B) மீன் பிடிக்க வளை வீசினான்.

C) அக்கறையுடன் படித்தால் முன்னுக்கு வரலாம்.

D) குக்கரிலிருந்து ஒளி வந்தது

விளக்கம் : விடை (C)

A) தவலை தண்ணீரில் குதித்தது

சரியான தொடர் : தவளை தண்ணீரில் குதித்தது

B) மீன் பிடிக்க வளை வீசினான்

சரியான தொடர்: மீன் பிடிக்க வலை வீசினான்

C) அக்கறையுடன் படித்தால் முன்னுக்கு வரலாம்

இத்தொடரில் எழுத்துப்பிழையோ, பொருள் பிழையோ இல்லை. எனவே இதுவே சரியான தொடர் ஆகும்.

D) குக்கரிலிருந்து ஒளி வந்தது

சரியான தெரடர் : குக்கரிலிருந்து ஒலி வந்தது

40. ஒரெழுத்து ஒருமொழிகளில் எத்தனை சொற்கள் குறில் எழுத்துகளாக அமைந்துள்ளன ?

A) மூன்று B) இரண்டு

C) நாற்பது D) பன்னிரண்டு

விளக்கம் : விடை (B)

தமிழ் இலக்கண நூலான நன்னூலில், பவணந்தி முனிவர் தமிழில் மொத்தம் 42 ஒரெழுத்து ஒருமொழிகள் (ஓர் எழுத்து தனித்து நின்று பொருள் தரும் சொற்கள்) இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த 42 எழுத்துகளில்:

நெடில் எழுத்துகள் : 40

குறில் எழுத்துகள் : 2

அந்த இரண்டு குறில் எழுத்துகள் மற்றும் அவற்றின் பொருள்கள் பின்வருமாறு:

1. நொ – வருந்துதல்

2. து – உண்

41. "புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்"
– இப்பாடல் வரி இடம்பெற்ற நூல் :
A) மணிமேகலை B) சிலப்பதிகாரம்
C) நெடுநல்வாடை D) வளையாபதி

விளக்கம் : விடை (C)

"புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்"

இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் நெடுநல்வாடை

புனையா ஓவியம் என்பது வண்ணங்கலவாமல் கரித்துண்டுகளால் வடிவத்தை மட்டும் வரைவதற்குப் புனையா ஓவியம்' என்று பெயர். நடைமுறையில் இன்றும் இது மென்கோட்டு ஓவியமாக (Sketch) உள்ளது.

நெடுநல்வாடை நூலில், தன் தலைவனைப் பிரிந்து எவ்வித ஆடை அலங்காரங்களோ அல்லது புனைவுகளோ இன்றி வருத்தத்துடன் எளிமையர்க் காட்சியளிக்கும் தலைவியின் அழகை விளக்குவதற்கு நக்கீரர் இவ்வரியைப் பயன்படுத்தியுள்ளார். அதாவது, அவள் வண்ணம் தீட்டப்படாத ஒரு தூய ஓவியம் போலக் காட்சியளித்தாள் என்பது இதன் பொருளாகும்.

42. பொருத்துக :

a) ராஜா நேற்று வந்தான்	i) செயப்பாட்டு வினைத் தொடர்
b) ராஜா நேற்று வருவித்தான்	ii) செய்வினைத் தொடர்
c) கவிதா உரை படித்தாள்	iii) பிறவினைத் தொடர்
d) உரை கவிதாவால் படிக்கப்பட்டது	iv) தன்வினைத் தொடர்

A) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
C) (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)
D) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)

விளக்கம் : விடை (A)

a) ராஜா நேற்று வந்தான் – தன்வினைத் தொடர்

ஒரு எழுவாய் தன் வினையைத் தானே செய்வது தன்வினை எனப்படும்.

இங்கு ராஜா என்ற எழுவாய் 'வந்தான்' என்ற செயலைத் தானே செய்ததால் இது தன்வினை.

b) ராஜா நேற்று வருவித்தான் – பிறவினைத் தொடர்

ஒரு எழுவாய் ஒரு செயலைத் தான் செய்யாமல், பிறரைக் கொண்டு செய்விப்பது பிறவினை எனப்படும். 'வருவித்தான்' என்பது பிறரை வரவழைத்தான் என்ற பொருளைத் தருவதால் இது பிறவினை.

c) கவிதா உரை படித்தாள் – செய்வினைத் தொடர்

எழுவாய், செயப்படுபொருள், பயன்நிலை என்ற வரிசையில் அமைந்து, வினையைச் செய்பவரை முதன்மைப்படுத்துவது செய்வினை ஆகும்.

இங்கு 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது (உரையைப் படித்தாள்). இது செய்வினை ஆகும்.

d) உரை கவிதாவால் படிக்கப்பட்டது – செயப்பாட்டு வினைத் தொடர்

செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வாக்கியம் செயப்பாட்டு வினை எனப்படும். இதில் எழுவாயோடு 'ஆல்' (கவிதாவால்) என்ற மூன்றாம் வேற்றுமை உருபும், பயனிலையோடு 'பட்டது' (படிக்கப்பட்டது) என்பதும் இணைந்து வரும். எனவே இது செயப்பாட்டு வினை ஆகும்.

43. "வாடா ராசா, வாடா கண்ணா" என்று தன் மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது :
A) திணை வழுவமைதி B) பால் வழுவமைதி
C) இட வழுவமைதி D) கால வழுவமைதி

விளக்கம் : விடை (B)

ஒரு தாய் தன் மகளை (பெண்பால்) நெருக்கத்தினாலும் உவப்பினாலும் "வாடா ராசா, வாடா கண்ணா" என ஆண்பாலாகக் குறிப்பிடுகிறாள்.

இலக்கண முறைப்படி இது தவறு என்றாலும், அன்பு மற்றும் மகிழ்ச்சியின் காரணமாக ஏற்றுக்கொள்ளப்படுவதால் இது பால் வழுவமைதி ஆகும்.

திணை வழுவமைதி

அஃறிணைப் பொருளை உயர்திணையாகக் கருதி, உயர்திணைக்குரிய வினைச்சொல்லால் கூறுவது திணை வழுவமைதியாகும்.

எடுத்துக்காட்டு:

"என் அம்மை வந்தாள்" என்று தன் வீட்டில் வளர்க்கும் பசுவை அன்போடு அழைப்பது.

இடவழுவமைதி

இலக்கண முறைப்படி ஒரு தொடரில் இடம் (தன்மை, முன்னிலை, படர்க்கை) மாறுபட்டுப் பிழையாக அமைந்தாலும், ஏதேனும் ஒரு காரணம் கருதி அதை முறையாக ஏற்றுக்கொள்வது இட வழுவமைதி எனப்படும்.

எடுத்துக்காட்டு:

"இந்த மாறன் ஒரு நாளும் பொய் கூறமாட்டான்

இத்தொடரில் பேசுபவர் தன்னைப் (தன்மை) பற்றி மூன்றாம் நபராக (படர்க்கை) "மாறன்" என்று தன் பெயரைப் படர்க்கை இடத்தில் கூறியுள்ளார். இலக்கணப் படி இது பிழை என்றாலும், தன்மையைப் படர்க்கை இடத்தில் கூறுவது 'இட வழுவமைதி ஆகும்.

கால வழுவமைதி

கால வழுவமைதி என்பது, ஒரு செயலின் காலத்தைக் குறிக்கும் வினைச்சொல் இலக்கணப்படி தவறாக இருந்தாலும், பொருளின் தன்மை, உறுதி கருதி காலத்தை மாற்றிப் பயன்படுத்துவதாகும்.

எடுத்துக்காட்டு:

"குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்."

44. **கூற்று (1): எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் ஒரு தொடரில் இடம் பெற்றிருக்கும்.**
கூற்று (2): எழுவாயோ, செயப்படு பொருளோ இல்லாமலும் தொடர் அமையும்.
A) கூற்று (1) சரி, கூற்று (2) தவறு
B) கூற்று (1) சரி, கூற்று (2) சரி
C) கூற்று (1) தவறு, கூற்று (2) தவறு
D) கூற்று (1) தவறு, கூற்று (2) சரி

விளக்கம் : விடை (B)

பொதுவாக ஒரு தொடரில் எழுவாய், செயப்படுபொருள், மற்றும் பயனிலை ஆகிய மூன்றும் முறையே இடம் பெற்றிருக்கும்.

எடுத்துக்காட்டு: "அமுதா பாடம் படித்தாள்"

அமுதா = எழுவாய்
பாடம் = செயப்படுபொருள்
படித்தாள் = பயனிலை

எனவே, இந்த மூன்று உறுப்புகளும் ஒரு தொடரில் இடம் பெற்றிருக்கும். எனவே கூற்று (1) சரி.

45. வினை மரபுச் சொற்களைப் பொருத்துக.

a) அம்பு	(i) விழுங்கினான்
b) சுவர்	(ii) முடைந்தார்
c) கூடை	(iii) எழுப்பினார்
d) மாத்திரை	(iv) எய்தார்

A) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
C) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)
D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

விளக்கம் : விடை (A)

அம்பு – எய்தார்
சுவர் – எழுப்பினார்
கூடை – முடைந்தார்
மாத்திரை – விழுங்கினான்

46. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
'எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற்று அல்ல பிற' – கல்வியின் பெருமையை உணர்த்தும் நாலடியாரின் பாடல் வரிகளை எழுதியவர் யார் ?

A) கபிலர் B) திருவள்ளுவர்
C) ஔவையார் D) சமணமுனிவர்பலர்

விளக்கம் : விடை (D)

நாலடியார்

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசன் செறின்வல்லார்
எச்சம் எனவொருவன் மக்கட் செய்வன
விச்சைமற்று அல்ல பிற – சமண முனிவர்கள்

பொருள் : கல்வியைப் பொருள் போல வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்படாது. ஒருவருக்கு வாய்க்கும்படி கொடுத்தாலும் குறைவுபடாது. மிக்க சிறப்பினை உடைய அரசராலும் கவரமுடியாது. ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்கவேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகாது.

47. பொருத்துக

a) அச்சு வெல்லம் (i) புளிப்பு
b) வாழைப்பூ (ii) கார்ப்பு
c) மிளகாய் (iii) இனிப்பு
d) புளியங்காய் (iv) துவர்ப்பு

A) (a)-(iv), (b)-(i), (c)-(iii), (d)-(ii)
B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
C) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)
D) (a)-(i), (b)-(ii), (c)-(iv), (d)-(iii)

விளக்கம் : விடை (B)

அச்சு வெல்லம் – இனிப்பு
வாழைப்பூ – துவர்ப்பு
மிளகாய் – கார்ப்பு
புளியங்காய் – புளிப்பு

48. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் கூற்றும் காரணமும் சரியா எனக் கண்டறிக :

கூற்று: "நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலை சிறந்த நண்பன்" என்பார் ஆபிரகாம் லிங்கன்.

காரணம் : மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்துவது சிரிப்பு மட்டுமன்று, சிந்திப்பதும் தான். சிந்தனையைத் தூண்டுவது கற்றல் மட்டுமன்று நூல்களும்தான், பட்டறிவையும் நூலகம் தருகிறது.

A) கூற்று சரி ; காரணம் தவறு
B) கூற்று தவறு ; காரணம் சரி
C) கூற்று சரி ; காரணம் சரி
D) கூற்று தவறு ; காரணம் தவறு

விளக்கம் : விடை (C)

நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கிவந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன் என்பார் ஆபிரகாம் லிங்கன். மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்துவது சிரிப்பு மட்டுமன்று, சிந்திப்பதும்தான். சிந்தனையைத் தூண்டுவது கற்றல் மட்டுமன்று,நூல்களும்தான். உலகமெங்கும் பயணம் செல்லும் பட்டறிவை நூலுலகம் தருகிறது. நல்ல நண்பனைப் போன்ற நூலையும், நல்ல நூலைப் போன்ற நண்பனையும் தேடிப் பெறவேண்டும். இசையைப் போன்றே இதயத்தைப் பண்படுத்துவன நூல்களே. ஆதலின் வீட்டிற்கோர் புத்தகசாலை என்றும் தேவை. இதை வலியுறுத்தும் வகையில் அறிஞர் அண்ணாவின் வானொலி உரை அமைந்துள்ளது. எனவே, கூற்று காரணம் இரண்டும் சரி.

49. சரியான விடையைத் தேர்க.'
விசேஷம் என்பதன் பொருள் யாது ?

A) நுட்பம் B) நாணம்
C) இசைவகை D) சிறப்பு

விளக்கம் : விடை (D)

விசேஷம் என்பது ஒரு வடமொழிச் சொல். இதன் பொருள் 'சிறப்பு' அல்லது 'மேன்மை' என்பதாகும். ஏதேனும் ஒரு முக்கிய நிகழ்வையோ அல்லது தனித்துவமான குணத்தையோ குறிக்க நாம் 'விசேஷம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறோம்.

(A) நுட்பம் : நுணுக்கம், கூர்மை
(B) நாணம் : வெட்கம்
(C) இசைவகை : இது கலை சார்ந்த சொல்

50. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் கூற்றும், காரணமும் சரியா எனக் கண்டறிக :

கூற்று: திருக்குறள் நீதி நூல் மட்டுமன்று, அஃது ஒரு வாழ்வியல் நூலாகும்.

காரணம்: எக்காலத்துக்கும். எல்லா மக்களுக்கும் பொருந்தும் அறக்கருத்துக்கள் இதில் இல்லை

A) கூற்று சரி; காரணம் தவறு
B) கூற்று சரி; காரணம் சரி
C) கூற்று தவறு; காரணம் தவறு
D) கூற்று தவறு; காரணம் சரி

விளக்கம் : விடை (A)

திருக்குறள் மனிதன் தன் வாழ்வில் பின்பற்ற வேண்டிய நற்பண்புகளைக் கூறுவதால் அது ஒரு சிறந்த 'நீதி நூல்' ஆகும்.

அதே சமயம், மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், சமுதாயத்தில் எவ்வாறு பழக வேண்டும் போன்ற நடைமுறை வாழ்க்கை நெறிகளை மிக அழகாகக் கற்பிப்பதால் அது ஒரு மிகச்சிறந்த 'வாழ்வியல் நூல்' ஆகும். எனவே, கொடுக்கப்பட்டுள்ள கூற்று சரியானது.

திருக்குறளில் உள்ள அறக்கருத்துக்கள் சாதி, மதம், இனம், மொழி, காலம் ஆகியவற்றைக் கடந்து உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் எக்காலத்திற்கும் பொருந்தும் தன்மையுடையவை. இதனால் தான் திருக்குறள் 'உலகப் பொதுமறை' என்று அழைக்கப்படுகிறது. ஆனால், இங்கு கொடுக்கப்பட்டுள்ள காரணத்தில் "அறக்கருத்துக்கள் இதில் இல்லை" என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே காரணம் தவறு.

51. பொருத்துக:

(a)	எழுவாயுடன் பெயர், வினை வினா தொடர்வது	(i)	உரிச்சொல் தொடர்
(b)	வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக அமையும் தொடர்கள்	(ii)	பெயரெச்சத் தொடர்
(c)	உரிச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது	(iii)	வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள்
(d)	முற்றுப்பெறாத வினை பெயரைக் கொண்டு முடிவது	(iv)	எழுவாய்த் தொடர்

A) (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)
B) (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)
C) (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)
D) (a)-(i), (b)-(iv), (c)-(ii), (d)-(iii)

விளக்கம் : விடை (A)

உரிச்சொல் தொடர்

தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாத சால, உறு, தவ,நனி,கூர், கழி, வான், மா, தட, வை, மழ, கடி போன்ற உரிச்சொற்களுடன் பெயரோ, வினையோ தொடர்ந்து வருவது உரிச்சொல் தொடராகும்.

எ.கா : தடக்கை, மாமலர், சாலச் சிறந்தது.

பெயரெச்சத் தொடர்

முற்றுப்பெறாத ஒரு வினைச்சொல் (எச்சம்) தன்னை அடுத்து வரும் ஒரு பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது பெயரெச்சம் எனப்படும்.

இந்தச் சொல்லும், அதைத் தொடர்ந்து வரும் பெயர்ச்சொல்லும் இணைந்து அமைவதே பெயரெச்சத் தொடர் .

எடுத்துக்காட்டாக, "படித்த பையன்" என்பதில் 'படித்த' என்பது முற்று பெறாத வினைச்சொல். 'பையன்' என்பது பெயர்ச்சொல். எனவே, 'படித்த' என்ற சொல் 'பையன்' என்ற பெயரைக்கொண்டு முடிவதால் இது பெயரெச்சத் தொடர் ஆகும்.

வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் என்பது இரு சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், கு, இன், அது, கண்) மறைந்து வராமல், வெளிப்படையாகத் தோன்றிப் பொருள் உணர்த்தும் தொடராகும்.

எ.கா: பாடத்தைப் படித்தான் (பாடம் + ஐ + படித்தான்).

இதில் 'ஐ' உருபு இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்துள்ளது.

எழுவாய் தொடர்

ஒரு வாக்கியத்தில் பெயர்ச்சொல்லாக வரும் எழுவாய், தன் பயனிலையோடு (வினை, பெயர் அல்லது வினா) நேரிடையாகத் தொடர்வது எழுவாய் தொடர் எனப்படும். இது முதல் வேற்றுமைத் தொடர் என்றும் அழைக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டுகள்:

வினை பயனிலை: கயல்விழி (எழுவாய்) பாடினாள் (வினை).

பெயர் பயனிலை: அவன் (எழுவாய்) மாணவன் (பெயர்).

வினா பயனிலை: அது (எழுவாய்) என்ன? (வினா).

52. பொருத்துக :

a)	யானை	i)	குருளை
b)	சிங்கம்	ii)	கன்று
c)	புலி	iii)	குட்டி
d)	குரங்கு	iv)	பறழ்

A) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)
B) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
C) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
D) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)

விளக்கம் : **விடை (A)**

யானை – கன்று
சிங்கம் – குருளை
புலி – பறழ்
குரங்கு – குட்டி

53. "சேகரமாய் வைத்த மரங்கள் –அத்தனையும் சின்னபின்ன மாய் ஒடிந்து பின்னமாச்சுதே" இப்பாடல் வரிகளில் சேகரமாய் என்பதன் பொருள் என்ன ?

A) மிக வருந்தி **B)** முறையாக
C) கூட்டம் **D)** சரியாக

விளக்கம் : **விடை (C)**

நாட்டுப்புறப் பாடல்

வாகுடனே தொண்டைமான்சீமை – தன்னிலே
வளர்ந்தோங்கும் மாநகரம் தன்னிலேதானே
சேகரமாய் வைத்தமரங்கள் – அத்தனையும்
சின்னபின்ன மாய்ஒடிந்து பின்னமாச்சுதே

பொருள் : தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன. இதில் சேகரம் என்றால் கூட்டம் ஆகும்.

54. MONOLINGUAL என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் எது ?

A) ஒப்பெழுத்து **B)** ஒரு மொழி
C) பெருங்காற்று **D)** புயல்

விளக்கம் : **விடை (B)**

MONOLINGUAL – ஒரு மொழி
Tempest – பெருங்காற்று
Homograph – ஒப்பெழுத்து
Storm – புயல்

55. காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று

A) ஏவல் வினைமுற்று **B)** வியங்கோள் வினைமுற்று
C) குறிப்பு வினைமுற்று **D)** தெரிநிலை வினைமுற்று

விளக்கம் : **விடை (C)**

குறிப்பு வினைமுற்று

பொருள்,இடம்,காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

பொருள் – பொன்னன்
சினை – கண்ணன்
இடம் – தென்னாட்டார்
பண்பு (குணம்) – கரியன்
காலம் – ஆதிரையான்
தொழில் – எழுத்தன்

தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுகள் அன்றி ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று எனப் பிறவகை வினைமுற்றுகளும் தமிழில் உண்டு.

தெரிநிலை வினைமுற்று

ஒரு செயல் நடைபெறுவதற்குச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும். இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

(எ.கா.) மாணவி கட்டுரை எழுதினாள்.

செய்பவர் – மாணவி
காலம் – இறந்தகாலம்
கருவி – தாளும் எழுதுகோலும்
செய்பொருள் – கட்டுரை
நிலம் – பள்ளி
செயல் – எழுதுதல்

ஏவல் வினைமுற்று

பாடம் படி. கடைக்குப் போ.

இத்தொடர்கள் ஒரு செயலைச் செய்யுமாறு கட்டளையிடுகின்றன. இவ்வாறு தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று, ஏவல் வினைமுற்று எனப்படும். ஏவல் வினைமுற்று ஒருமை, பன்மை ஆகிய இருவகைகளில் வரும்.

(எ.கா.) எழுது – ஒருமை
எழுதுமின் – பன்மை

பன்மை ஏவல் வினைமுற்று எழுதுங்கள் என வருவது இக்கால வழக்கு.

வியங்கோள் வினைமுற்று

வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும். இவ்வினைமுற்று இரு திணைகளையும் (உயர்திணை, அஃறிணை) ஐந்து பால்களையும் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால்) மூன்று இடங்களையும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) காட்டும். இதன் விகுதிகள் க, இய, இயர், அல் என வரும். (எ.கா.) வாழ்க,ஒழிக, வாழியர், வாரல்

56. கூற்று (1) : சொற்கள் அடுக்கி வந்து, பிரிந்தாலும் பொருள் தருவது அடுக்குத் தொடர் ஆகும்.

கூற்று (2) அடுக்குத் தொடர் ஒரெழுத்து ஒரு மொழியாய் மட்டுமே வரும்.

A) கூற்றுகள் (1) வும், (2) வும் சரி
B) கூற்றுகள் (1) வும், (2) வும் தவறு
C) கூற்று (1) சரி கூற்று (2) தவறு
D) கூற்று (1) தவறு கூற்று (2) சரி

விடை (C)

விளக்கம் :

கூற்று (1) சரி

அடுக்குத் தொடரில் ஒரு சொல் இரண்டு, மூன்று அல்லது நான்கு முறை அடுக்கி வரும். அச்சொற்களைத் தனித்தனியாகப் பிரித்தாலும் பொருள் தரும். (எடுத்துக்காட்டாக: வாழ்க வாழ்க! இதில் வாழ்க என்பதைப் பிரித்தாலும் பொருள் உண்டு).

கூற்று (2) தவறு

அடுக்குத் தொடர் ஓரெழுத்து ஒரு மொழியாக மட்டுமே வரும் என்பது தவறானது. அது பல எழுத்துக்கள் கொண்ட சொற்களாகவும் வரும். (எ.கா: பாம்பு பாம்பு, ஓடு ஓடு).

57. பொருத்துக :

a) பெயர்ச்சொல்	i) உம்
b) உரிச்சொல்	ii) மாநகர்
c) இணைப்புச் சொல்	iii) ஓடுதல்
d) வினைச்சொல்	iv) மரம்

A) (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)
B) (a)-(i), (b)-(iii), (c)-(iv), (d)-(ii)
C) (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)
D) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

விடை (C)

விளக்கம் :

பெயர்ச்சொல்

ஒன்றன் பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொற்கள் ஆறு வகைப்படும். அவை:

1. பொருட்பெயர்: உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களின் பெயர்களைக் குறிப்பது (எ.கா: மனிதன், புத்தகம், மரம்).

2. இடப்பெயர்: இடங்களின் பெயர்களைக் குறிப்பது (எ.கா: சென்னை, பள்ளி, வீடு).

3. காலப்பெயர்: காலத்தைக் குறிக்கும் பெயர்கள் (எ.கா: திங்கள், சித்திரை, மாலை).

4. சினைப்பெயர்: உறுப்புகளின் பெயர்களைக் குறிப்பது (எ.கா: கை, கண், கிளை).

5. பண்புப்பெயர்: பொருளின் குணத்தை உணர்த்துவது (எ.கா: இனிப்பு, நன்மை. வட்டம்).

6. தொழிற்பெயர்: தொழிலைக் குறிக்கும் பெயர்கள் (எ.கா: படித்தல், ஆடுதல், ஓட்டம்).

உரிச்சொல்

பெயர்ச்சொல் மற்றும் வினைச்சொற்களின் தன்மையை மிகைப்படுத்தியோ அல்லது அவற்றுக்கு சிறப்பான விளக்கம் கொடுத்தோ அவற்றின் முன் வரும் சொற்கள் உரிச்சொல் எனப்படும். இவை இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றை உணர்த்தும். உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியவை என்றாலும், இலக்கிய நயத்திற்காகவும் பொருளை வலுப்படுத்தவும் உரைநடைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

எ. கா: மாநகரம், உறுபசி, தவச்சிறிது, நனிநன்று

இணைப்புச் சொல்

இரண்டு சொற்களையோ அல்லது தொடர்களையோ இணைக்கப் பயன்படும் சொல் இணைப்புச் சொல் (இடைச்சொல்) ஆகும்.

இங்கு 'உம்' (எ.கா: இரவும் பகலும்) என்பது இணைப்புச் சொல்லாகச் செயல்படுகிறது.

வினைச்சொல்

ஒரு பொருளின் செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். இங்கு 'ஓடுதல்' என்பது ஒரு செயலைக் குறிப்பதால் இது வினைச்சொல் (தொழிற்பெயர் வடிவில் உள்ள வினை) ஆகும்.

58. பொருத்துக :

a) அலந்தவர்	i) பகைவர்
b செறாஅமை	ii) பொறுத்தல்
c) நோன்றல்	iii) வெறுக்காமை
d) போற்றார்	iv) வறியவர்

A) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
B) (a)-(ii), (b)-(i), (c)-(iv), (d)-(iii)
C) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

விடை (C)

விளக்கம் :

அலந்தவர்– வறியவர்

'அலந்தவர்' என்றால் வறுமையில் வாடுபவர் அல்லது ஏழ்மை நிலையில் உள்ளவர் என்று பொருள்.

செறாஅமை – வெறுக்காமை

ஒருவரை வெறுக்காமல் இருக்கும் பண்பைக் குறிக்கிறது.

நோன்றல் – பொறுத்தல்

துன்பங்களையோ அல்லது பிறர் செய்யும் தீமைகளையோ பொறுத்துக் கொள்ளுதல் என்று பொருள்.

போற்றார் – பகைவர்

நம்மைப் போற்றாதவர், அதாவது நம்மிடம் அன்பு பாராட்டாத 'பகைவர்' அல்லது மாறுபட்டவர் என்று பொருள்.

59. கூற்று (1): சிலம்பு என்றால் ஒலித்தல் என்பது பொருள்.
கூற்று (2): கடையெழு வள்ளல்களுள் ஒருவரான 'வல்வில் ஓரி' சிலம்பாட்டத்தில் சிறந்து விளங்கியவர்.

A) கூற்று (1), கூற்று (2) இரண்டும் சரி
B) கூற்று (1),கூற்று (2) இரண்டும் தவறு
C) கூற்று (1) தவறு, கூற்று (2) சரி
D) கூற்று (1) சரி, கூற்று (2) தவறு

விடை (D)

விளக்கம் :

கூற்று (1) சரி:

'சிலம்பல்' என்ற வினைச்சொல்லுக்கு 'ஒலித்தல்' என்று பொருள் உண்டு. கம்பு சுழலும் போது ஏற்படும் ஒசை மற்றும் ஆயுதங்கள் மோதும் ஒலியின் காரணமாகவே தமிழர்களின் தற்காப்புக் கலைக்குச் சிலம்பம் என்ற பெயர் ஏற்பட்டது.

கூற்று (2) தவறு :

கடையேழு வள்ளல்களுள் ஒருவரான ஓரி, வில்வித்தையில் மிகச் சிறந்து விளங்கியதால் 'வல்வில் ஓரி' (வலிமையான வில்லைக் கொண்ட ஓரி) என்று அழைக்கப்பட்டார். அவர் சிலம்பாட்டத்திற்காகப் புகழ்பெற்றவர் அல்ல. எனவே கூற்று 2 தவறு.

60. கூற்று (1) : கல்லணை தமிழர்களின் கட்டுமானத் திறனைப் பறைசாற்றுவதாக உள்ளது.
கூற்று (2): கல்லணை கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

A) கூற்று (1) கூற்று (2) இரண்டும் சரி
B) கூற்று (1), சரி, கூற்று (2) தவறு
C) கூற்று (1) தவறு கூற்று (2) சரி
D) கூற்று (1), கூற்று (2) இரண்டும் தவறு

விடை (B)

விளக்கம் :

கூற்று (1) சரி :

எந்தவொரு நவீன தொழில்நுட்பமும் இல்லாத சங்க காலத்திலேயே, மணலில் அடித்தளம் அமைத்து, காவிரியின் பெருவெள்ளத்தைத் தாங்கும் வகையில் பழந்தமிழர்கள் கல்லணையைக் கட்டியுள்ளனர். இது இன்றளவும் உலகப் பொறியாளர்களால் வியந்து பார்க்கப்படும் தமிழர்களின் மிகச்சிறந்த கட்டுமானத் திறனின் சான்றாகும்.

கூற்று (2) தவறு :

கல்லணை வரலாற்றுத் தரவுகளின்படி சோழ மன்னனான கரிகால் சோழனால் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் (சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு) கட்டப்பட்டது. கல்லணையின் நீளம் 1080 அடி அகலம் 40 முதல் 60 அடி, உயரம் 15 முதல் 18 அடி. எனவே கூற்று 2 தவறு.

தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு

ஒரிஜினல் வினாத்தாள் - 2026

காலம் : 3 மணி நேரம்
மதிப்பெண் : 150

தாள் - II

நாள் : 05.07.2026

Part II - தமிழ்

31. கடல் என்பது ..... சீர்.

A) நேரசை B) மூவசை
C) நிரையசை D) நாலசை

விளக்கம்: **விடை: (C)**

நேரசை

குறில் தனித்தும், குறில் ஒற்றடுத்தும், நெடில் தனித்தும், நெடில் ஒற்றடுத்தும் வருவது நேரசையாகும்.

நிரையசை

இருகுறில் இணைந்தும், இருகுறில் இணைந்து ஒற்றடுத்தும், குறில்நெடில் இணைந்தும், குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்தும் வருவன நிரையசைகள்.

கடல் என்ற சொல்லில் இரு குறில் இணைந்து ஒற்றடுத்துள்ளது. எனவே இச்சொல் நிரையசை ஆகும்.

மூவசைச்சீர்

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீராக அமைவது "மூவசைச்சீர்' எனப்படும். இதில் நேரில் முடிவது காய்ச்சீர் என்றும், நிரையில் முடிவது கனிச்சீர் என்றும் அழைக்கப்படும்.

நாலசைச்சீர்

நான்கு அசைகள் இணைந்து உருவாகும் சீர்கள் நாலசைச்சீர் எனப்படும்.

32. ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவிற்கான மாத்திரை என்ன ?

A) 1 B) 2
C) ½ D) 3

விளக்கம்: **விடை: (C)**

எழுத்துகளின் ஒலி அளவு குறித்ததே மாத்திரை. 'மாத்திரை' என்ற ஒலி அளவு யாதெனின் கண் இமைக்கும் நேரம் அல்லது 'கைநொடி நேரம் என்பர் இலக்கண நூலார். எழுத்துகளின் மாத்திரை இரண்டிற்கு மேல் இல்லை என்பது இலக்கண நூலார் கருத்து; அதற்கு மேலும் மாத்திரை பெற வேண்டுமெனில் அது அளபெடையாகச் செய்யுளில் வரும்; அல்லது இசையில் வரும்.

எழுத்துகள்	மாத்திரை அளவு
குறில்	1
நெடில்	2
மெய் எழுத்துகள்	1/2
ஆய்த எழுத்துக்கள்	1/2
மகரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம்	1/4
குற்றியலிகரம், குற்றியலுகரம்	1/2
ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம்	1
உயிரளபெடை	3
ஒற்றளபெடை	1

33. பொருத்துக:

a) ஈரறிவு i) பறவை, விலங்கு
b) ஓரறிவு ii) கரையான்,எறும்பு
c) மூவறிவு iii) சிப்பி, நத்தை
d) ஐந்தறிவு iv) புல்,மரம்

A) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)
B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
C) (a)-(i), (b)-(ii), (c)-(iv), (d)-(iii)
D) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

விளக்கம்: **விடை: (B)**

அறிவு நிலை	அறியும் ஆற்றல்	எடுத்துக்காட்டு
ஓரறிவு	உற்றறிதல் (தொடுதல் உணர்வு)	புல், மரம்
ஈரறிவு	உற்றறிதல், சுவைத்தல்	சிப்பி, நத்தை
மூவறிவு	உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல்	கரையான், எறும்பு
நான்கறிவு	உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல், காணல்	நண்டு, தும்பி
ஐந்தறிவு	உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல், காணல், கேட்டல்	பறவை,விலங்கு
ஆறறிவு	உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல், காணல், கேட்டல், பகுத்தறிதல் (மனம்)	மனிதன்

34. வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று:

A) ஏவல் வினைமுற்று
B) குறிப்பு வினைமுற்று
C) தெரிநிலை வினைமுற்று
D) வியங்கோள் வினைமுற்று

விளக்கம்: **விடை: (D)**

வியங்கோள் வினைமுற்று

க, இய, இயர் என்ற விகுதிகளில் ஒன்றைப் பெற்றுவரும். வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் என்ற நான்கு பொருளில் வரும்.

(எ.கா)– வாழ்க, வாழிய, வாழியர்.

தெரிநிலை வினைமுற்று

திணை, பால், காலம் போன்றவற்றை வெளிப்படையாகக் காட்டி சொல் முடிவது தெரிநிலை வினைமுற்றாகும். இது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகியவற்றை வெளிப்படுத்தும்.

(எ.கா) :– ஓவியன் சித்திரம் தீட்டினான்
செய்பவன் – ஓவியன்
நிலம் – சுவர் அல்லது திரைச்சீலை
செய்பொருள் – சித்திரம்
திணை – உயர்திணை,
கருவி – தூரிகை, வண்ணம்

செயல் – தீட்டினான்
காலம் – இறந்தகாலம்
பால் – ஆண்பால்

குறிப்பு வினைமுற்று

திணை, பால் போன்றவற்றை வெளிப்படையாகக் காட்டி காலத்தை மட்டும் குறிப்பால் உணர்த்துவது குறிப்பு வினைமுற்றாகும்.

(எ.கா):– அவன் நல்லன், அவன் இன்சொல்லன்

இது பொருள் முதல் ஆறனையும் அடிப்படையாகக் கொண்டு, செய்பவன் முதலான ஆறனுள் கருத்தா ஒன்றனை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் குறிப்பாகக் காட்டும்.

ஏவல் வினைமுற்று

முன்னிலையில் உள்ள ஒருவரை அல்லது ஒன்றனை ஆணையிட்டு ஏவும் வினைக்கு ஏவல் வினைமுற்று என்று பெயர்.

எ.கா – நீ படி, நீர் வாரீர்

35. 'உயிர்மெய் நெடில்' எழுத்துக்கள் மொத்தம்

A) 126 B) 132
C) 90 D) 12

விளக்கம்: **விடை: (A)**

உயிர் எழுத்துகள்	– 12
மெய் எழுத்துக்கள்	– 18
ஆய்த எழுத்து	– 1
உயர் மெய் எழுத்துக்கள்	– 216
உயிர்மெய் குறில்	– 90
உயிர்மெய் நெடில்	**– 126**

36. எட்டுப் பொருளில் வரும் இடைச்சொல்

A) ஆ B) மட்டும்
C) தான் D) ஓ

விளக்கம்: **விடை: (D)**

ஓ – ஒகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை, ஆகிய எட்டுப் பொருள்களில் வரும்.

தற்காலத்தில் ஒகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாகவும், ஐயம், உறுதியாகக் கூறாமுடியாமை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை–அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றன.

(எ.கா) இன்றைக்கு மழைபெய்யுமோ? (ஐயம்)

பூங்கொடியோ மலர்க்கொடியோ (இது அல்லது அது)

ஆ – வினாப் பொருளில் வரும் இடைச்சொல்லாகும்.

(எ.கா) – புகழேந்தி உன்னிடம் பேசினானா?

புகழேந்தி நேற்று உன்னுடனா பேசினான்?

மட்டும் –இச்சொல் வரையறைப் பொருளைத் தருகிறது. முடிந்தவிரை, குறிப்பிட்ட நேரம் வரை என்ற பொருள்களிலும் வருகிறது.

(எ.கா) படிப்பு மட்டும் இருந்தால் போதும்.

தான் – 'தான்' என்னும் இடைச்சொல் அழுத்தப் பொருளில் மட்டும் வருகிறது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ அதனை முதன்மைப் படுத்துகிறது. ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே அமைகிறது.

நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்

நிர்மலா நேற்றுதான் விழாவில் பாடினாள்

நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்

நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்தான்

நிர்மலாதான் பாடினாள்–'தான்' என்பது இடைச்சொல் குழு

நிர்மலாதானும் பாடினாள் – தான் என்பது தற்சுட்டுப் படர்க்கை ஒருமை இடப்பெயர்.

37. ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய ஆறு வகையான பொருள்களில் வருவது

A) மூன்றாம் வேற்றுமை
B) இரண்டாம் வேற்றுமை
C) நான்காம் வேற்றுமை
D) ஐந்தாம் வேற்றுமை

விளக்கம்: **விடை: (B)**

இரண்டாம் வேற்றுமை

இவ்வேற்றுமையின் உருபு 'ஐ' என்பதாகும். இதனை செயப்படுபொருள் வேற்றுமை என்றும் கூறுவர். 'கயல்விழி புத்தகத்தைப் படித்தாள்' என்ற தொடரில் 'புத்தகம்' என்ற பெயர்ச்சொல் 'ஐ' என்ற வேற்றுமை உருபினை ஏற்று புத்தகத்தை' என்று செயப்படுபொருளாக மாறி நிற்பதால் செயப்படுபொருள் வேற்றுமை என வழங்கப்படுகிறது. இவ்வேற்றுமை ஆறு பொருள்களில் அமையும்.

கல்லூரியை நிறுவினான்	ஆக்கல்
மூட நம்பிக்கைகளை ஒழித்தான்	அழித்தல்
வெற்றியை அடைந்தான்	அடைதல்
குடியை விட்டான்	நீத்தல்
கொடியைப் போன்றவள்	ஒத்தல்
பண்பை உடையவன்	உடைமை

மூன்றாம் வேற்றுமை

இவ்வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஒடு, உடன் முதலியன. கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி முதலிய மூன்று பொருள்களில் இவ்வேற்றுமை அமையும்.

நான்காம் வேற்றுமை

இவ்வேற்றுமையின் உருபு 'கு' என்பதாகும். இவ்வேற்றுமை ஏழு பொருள்களில் அமையும். கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை.

ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமை உருபு 'இல்', 'இன்' என்பன. இவ்வேற்றுமை நான்கு பொருள்களில் அமையும். அவை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது (காரணம்) முதலியனவாகும்.

38. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! என்னும் அடியில் 'கொடுத்தோர்' என்னும் சொல்லுக்கான இலக்கணக் குறிப்பினைத் தேர்க.

A) தொழிற்பெயர்
B) வினையாலணையும் பெயர்
C) வியங்கோள் வினைமுற்று
D) உரிச்சொல் தொடர்

விளக்கம்: **விடை: (B)**

வினையாலணையும் பெயர்

ஒரு வினைமுற்றுச் சொல் தன்னுடைய வினைமுற்றுப் பொருளைக் காட்டாமல், அவ்வினையைச் செய்த கருத்தாவைக் குறிக்குமானால் அது வினையாலணையும் பெயராகும்.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! என்னும் அடியில் 'கொடுத்தோர் என்ற சொல் கொடுத்தல் என்ற செயலை மட்டும் குறிக்காமல் உணவை அளித்த மக்களை குறிக்கிறது. எனவே, இது வினையாலணையும் பெயர் ஆகும்.

தொழிற்பெயர்

ஒரு தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும். இது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் காட்டாது.

(எ.கா) உண்ணல், உறங்கல், ஓடுதல்

தொழிற்பெயர்கள் படர்க்கை இடத்தில் மட்டுமே அமையும்.

தொழிற்பெயர் விகுதிகள்: தல், அல், அம், ஐ, கை, வை, கு,பு,உ,தி,சி,வி,உள்,காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்ற 19 விகுதிகளும் பிறவுமாம்.

வினைமுற்றுச் சொற்களோடு மேற்கண்ட விகுதிகளைச் சேர்த்தால் தொழிற்பெயராகும். எ.கா: கூறுதல் – கூறு + தல், பாடல் – பாடு + அல்

வியங்கோள் வினைமுற்று

க, இய, இயர் என்ற விகுதிகளில் ஒன்றைப் பெற்றுவரும். வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் என்ற நான்கு பொருளில் வரும்.

(எ.கா) – வாழ்க, வாழிய, வாழியர்.

உரிச்சொற்றொடர்

உரிச்சொல்லைத் தொடர்ந்து வேறு சொல் வரும் பொழுது அஃது உரிச்சொற்றொடர் ஆகும்.

(எ.கா) மாமுனிவர் மா (உரிச்சொல்)

சாலச்சிறந்தது சால (உரிச்சொல்)

கடிமணம் கடி (உரிச்சொல்)

39. நீள் + உழைப்பு' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்:

A) நீள்ளுழைப்பு **B)** நீளுஉழைப்பு

C) நீண்டுழைப்பு **D)** நீளுழைப்பு

விளக்கம்: **விடை: (D)**

நீள் + உழைப்பு = நீளுழைப்பு

இலக்கண விதிகளின் படி உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி , ள் + உ = ளு (நீளுழைப்பு) என்றானது.

40. 'பிழைத்த வேல்' – இது எவ்வகைத் தொடர் என்பதைக் குறிப்பிடுக.

A) பெயரெச்சத் தொடர் **B)** அடுக்குத் தொடர்

C) உரிச்சொல் தொடர் **D)** வினையெச்சத் தொடர்

விளக்கம்: **விடை: (A)**

பெயரெச்சத் தொடர்

பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் எச்சவினை பெயரெச்சத் தொடராகும்.

(எ.கா) – **பிழைத்த வேல்,** விழுந்த மரம், கேட்ட பாடல்

அடுக்குத்தொர்டர்

பொருள் உடைய ஒரே சொல் மீண்டும் மீண்டும் அடுக்கி வருதல் அடுக்குத் தொடர் எனப்படும்.

(எ.கா) – நன்று நன்று; ஓடு ஓடு ; வாழ்க வாழ்க; பிடி பிடி

உரிச்சொல் தொடர்

உரிச்சொல்லைத் தொடர்ந்து வேறு சொல் வரும் பொழுது அஃது உரிச்சொற்றொடர் ஆகும். (எ.கா) மாமுனிவர், சாலச்சிறந்தது

வினையெச்சத் தொடர்

வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்சவினை வினையெச்சத் தொடராகும்.

(எ.கா) – வந்து சென்றான், பாடி மகிழ்ந்தனர்.

41. 'பகைவனென்றாலும்'–என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது

A) பகைவன் + என்று + ஆலும்

B) பகைவன் + என்றாலும்

C) பகை + அன் + என் + ஆலும்

D) பகை +என்று+ஆலும்

விளக்கம்: **விடை: (B)**

'பகைவனென்றாலும்' – பகைவன் + என்றாலும்

42. மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள்:

A) மெய்யெழுத்துக்கள் பதினெட்டு

B) மெய்யெழுத்துக்கள் பதினேழு

C) மெய்யெழுத்துக்கள் பதினாறு

D) மெய்யெழுத்துக்கள் பதினான்கு

விளக்கம்: **விடை: (A)**

மொழி முதல் எழுத்துகள்:

1. உயிரெழுத்துகள் பன்னிரெண்டும் சொல்லின் முதலில் வரும்.

2. மெய்யெழுத்துகள் பதினெட்டும் தனிமெய் வடிவில் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. அவை உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் வடிவிலேயே மொழிக்கு முதலில் வருகின்றன.

3. க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் உயிர்மெய் வடிவங்களாகச் சொல்லின் முதலில் வரும். (ங வரிசையில் 'ங' மட்டுமே சொல்லின் முதலில் வரும்).

4. ட, ண, ர, ல, ழ, ள, ற, ன என்னும் எட்டு வரிசைகள் சொல்லின் முதலில் வருவதில்லை.

5.ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.

43. 'குவிமொட்டு' –இலக்கணக் குறிப்புத் தருக.

A) பண்புத் தொகை **B)** வினைத் தொகை

C) அன்மொழித் தொகை **D)** உவமைத் தொகை

விளக்கம்: **விடை: (B)**

வினைத்தொகை

"காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" – நன்னூல் 364.

'கரந்த' என்றால் 'மறைந்துவருவது' என்று பொருளாகும். வினைத்தொகை என்பது ஒரு வினைச்சொல்லும் ஒரு பெயர்ச்சொல்லும் இணைந்த கூட்டுச்சொல்லாகும். இதில் முதல்சொல் வினைச் சொல்லாகவும் இரண்டாவது சொல் பெயர்ச்சொல்லாகவும் இருக்கும்.

முதலாவது வரும் வினைச் சொல்லானது மூன்று காலத்தையும் குறிப்பால் உணர்த்தும் சொல்லாக அமையும்.

எ.கா.

வினைத்தொகை	இறந்த காலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
குவிமொட்டு	குவிந்த மொட்டு	குவிகின்ற மொட்டு	குவியும் மொட்டு
ஊறுகாய்	ஊறிய காய்	ஊறுகின்ற காய்	ஊறும் காய்

பண்புத்தொகை

சொற்றொடரில் பெயர்ச்சொல்லுக்கு இடையே 'ஆகிய' 'ஆன' என்கிற பண்புருபுகள் மறைந்து வரும் சொற்களைப் பிரிக்கும்பொழுது நிலைமொழி ஈற்றில் 'ம்ம' விகுதி பெற்று வரும்.

எ.கா :

செந்தாமரை – செம்மை + தாமரை (செம்மையாகிய தாமரை)

கடுங்கதிர் – கடுமை + கதிர் (கடுமையாகிய கதிர்)

மூதூர் – முதுமை + ஊர் (முதுமையாகிய ஊர்)

இன்சொல் – இனிமை + சொல் (இனிமையாகிய சொல்)

உவமைத்தொர்கை

ஒரு பொருளை சிறப்பித்துக் கூறுவதற்கு அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளை சேர்த்துக் கூறும் பொழுது 'போல, போன்ற' 'புரைய, ஒப்ப ஆகிய உவம உருபுகள் மறைந்து வந்தால் அது உவமைத்தொகை எனப்படும்.

(எ.கா)– மதிமுகம் – மதி போன்ற முகம் ; மலர் அடி – மலர் போன்ற அடி

அன்மொழித் தொகை

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகைகளை அடுத்து ஒரு சொல் தொடர்ந்து வருவது அன்மொழித் தொகை எனப்படும்.

(எ.கா) பொற்கொடி நடந்தாள் – பொன்னால் ஆகிய கொடியின் தன்மை கொண்ட பெண் நடந்தாள்.

தேன்மொழி நகைத்தாள் – தேன் போன்ற மொழியை உடையாள் நகைத்தாள்.

44. வல்லினம் மிகும் இடங்களில் ஒன்று

A) உவமைத் தொகை B) வினைத் தொகை
C) உம்மைத் தொகை D) பெயரெச்சம்

விளக்கம்: **விடை: (A)**

வல்லினம் மிகும் இடங்கள்

1. அ, இ என்னும் சுட்டெழுத்துக்களுக்குப் பின்னும், அந்த, இந்த என்னும் சுட்டுத் திரிபுகளின் பின்னும், எ என்னும் வினாவெழுத்தின் பின்னும், எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும். எ.கா இந்தக்காலம், அச்சட்டை, எத்திசை
2. ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். எ.கா கதவைத்திற
3. கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். எ.கா மெட்டுக்குப்பாட்டு
4. என, ஆக போன்ற சொல்லுருபுகளின்பின் வல்லினம் மிகும். எ.கா எனக்கேட்டார்
5. அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும். எ.கா இதற்குக் கொடு, அதற்குச் சொன்னேன்
6. இனி, தனி ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகும். எ.கா இனிக் காண்போம், தனிச் சிறப்பு
7. மிக என்னும் சொல்லின்பின் வல்லினம் மிகும். எ.கா மிகப் பெரியவர்
8. எட்டு, பத்து என்னும் எண்ணுப்பெயர்களின்பின் வல்லினம் மிகும். எ.கா எட்டுத்தொகை, பத்துப்பாட்டு
9. ஒரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும்.
   எ.கா தீப் பிடித்தது
10. உவமைத்தொகையில் வல்லினம் மிகும். எ.கா – தாமரைப்பாதம்
11. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லினம் மிகும். எ.கா ஓடாக் குதிரை
12. வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும். எ.கா கேட்டுக் கொண்டான்
13. (அகர, இகர ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும். எ.கா ஆடச் சொன்னார்
14. ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும். எ.கா புலித்தோல்
15. திசைப்பெயர்களின்பின் வலிமிகும். எ.கா கிழக்குப் பகுதி
16. இரு பெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும். எ.கா மல்லிகைப்பூ
17. சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களின்பின் வல்லினம் மிகும். எ.கா. தவச்சிறிது
18. தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின்பின் வல்லினம் மிகும். எ.கா நிலாச் சோறு, கனாக் கண்டேன்
19. சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும். எ.கா வாழ்க்கைப்படகு, உலகப்பந்து.

45. பொருத்துக:

a) புறா	i) குழறும்
b) கோழி	ii) கொக்கரிக்கும்
c) சேவல்	iii) குனுகும்
d) கூகை	iv) கூவும்

A) (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)
B) (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)
C) (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)
D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

விளக்கம்: **விடை: (C)**

புறா – குனுகும்
கோழி – கொக்கரிக்கும்
சேவல் – கூவும்
கூகை – குழறும்

46. பகுபத உறுப்புகளில் அடங்காமல் ஏழாவது உறுப்பாக வரும் புறத்துறுப்பை எவ்வாறு அழைக்கலாம் ?

A) சாரியை B) விகாரம்
C) எழுத்துப் பேறு D) சந்தி

விளக்கம்: **விடை: (C)**

எழுத்துப்பேறு :

பகுபத உறுப்புகளுள் அடங்காமல் ஏழாவது உறுப்பாக அமைந்து பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு. இது புறத்துறுப்பு எனப்படும்.

(எ.கா)

வந்தனன் – வா (வ) + த் (ந்) + அன் + அன்

வா – பகுதி 'வ' ஆனது விகாரம்
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
அன் – சாரியை
அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

சாரியை :

பகுதியோடு இடைநிலையும், இடைநிலையோடு விகுதியும் பொருத்தமாகச் சார்ந்து இயைய வரும் உறுப்பு சாரியை ஆகும்.

சந்தி வரவேண்டிய இடத்தில் உயிர்மெய் எழுத்து வந்தால் அதனைச் சாரியை எனக் குறிப்பிட வேண்டும்.

(எ.கா) தருகுவென் – தா (தரு) + கு+வ்+என்.

இதில் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் 'கு' சாரியை ஆகும்.

சாரியைக்குப் பொருள் இல்லை.

'அன் என்பது விகுதியாக வரும்போது 'அன்' என்பதே சாரியையாக வரும்.

சாரியைகள் – அன், ஆன், இன், இல்,அற்று, இற்று, அத்து, அம், தம், நம்,நும்,ஏ,ஆ,ஊ, ஐ,கு,ன்

விகாரம் :

பகுதி, விகுதி, இடைநிலை ஆகியன புணரும் போது அவற்றின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும். இஃது ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிந்தும் கெட்டும் நெடில் குறிலாகவும் மாற்றம் பெறும். இத்தகைய மாற்றமே விகாரம் எனப்படும்.

எ.கா :நின்றான் – நில்(ன்) + ற் +ஆன்.

'நில்' என்னும் பகுதியில் 'ல்' 'ன்' ஆகத் திரிந்தது விகாரம்

47. இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் தந்தால் அதனை ..... என்பர்.

A) பண்புத்தொகை
B) வினைத்தொகை
C) வேற்றுமைத்தொகை
D) உம்மைத்தொகை

விளக்கம்: விடை: (C)

வேற்றுமைத்தொகை

இரண்டு சொற்களுக்கிடையே வேற்றுமை உருபுகள் மறைந்து வந்தால் அது வேற்றுமைத் தொகை எனப்படும். முதல் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை தவிர பிற ஆறு வேற்றுமைத் தொடர்களுக்கும் உருபு உண்டு.

	தொகை நிலைத் தொடர்	மறைந்த உருபு	தொகாநிலைத் தொடர்
2 –ஆம் வேற்றுமை	மொழி கற்றான்	ஐ	மொழியைக் கற்றான்
3 –ஆம் வேற்றுமை	தலை வணங்கினான்	ஆல்	தலையால் வணங்கினான்
4– ஆம் வேற்றுமை	கல்லூரி சென்றாள்	கு	கல்லூரிக்குச் சென்றாள்
5– ஆம் வேற்றுமை	கண் கடைப்பார்வை, மலையருவி	இன் / இல்	கண்ணின் கடைப்பார்வை / மலையில் அருவி
6– ஆம் வேற்றுமை	கண்பார்வை	அது	கண்ணினது பார்வை
7 – ஆம் வேற்றுமை	பாற்கவை	கண்	பாலின்கண் கவை

48. கீழ்க்கண்டவற்றுள் காரணச் சிறப்புப் பெயர் எது ?

A) பறவை B) மண்

C) மரம் D) மரங்கொத்தி

விளக்கம்: விடை: (D)

காரணப்பெயர்

ஏதேனும் ஒரு காரணம் பற்றியோ அல்லது பல காரணங்கள் பற்றியோ வழங்கி வரும் பெயர் காரணப்பெயர் எனப்படும்.

சான்று:

முக்காலி – மூன்று கால்கள் இருப்பதால் முக்காலி என வழங்கப்படுகிறது.

காரணச் சிறப்புப்பெயர்

மரங்கொத்தி என்பது காரணச் சிறப்புப் பெயராகும். பறவைகள் பல இருந்தாலும், மரத்தைக் கொத்தும் ஒரு குறிப்பிட்ட பறவை இனத்தை மட்டுமே குறிக்கிறது. எனவே இது காரணச்சிறப்புப் பெயராகும். (எ.கா) மோதிரம், கபிலர், வளையல்

காரணப் பொதுப்பெயர்

பறப்பதனால் 'பறவை' எனக் காரணம் கருதி வழங்கும் பெயராயிற்று. காகம், குயில், புறா, கிளி ஆகிய அனைத்தையும் பறவை என்னும் பொதுச்சொல்லால் அழைக்கிறோம். அதனால், இதனைக் 'காரணப்பொதுப்பெயர்' என்கிறோம்.

(எ.கா) பறவை, அணிகலன், புலவன்

49. செற்றவர் என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு யாது ?

A) வினைமுற்று B) வினையாலணையும் பெயர்

C) தொழிற்பெயர் D) பெயர்ச்சொல்

விளக்கம்: விடை: (B)

வினையாலணையும் பெயர்

ஒரு வினைமுற்றுச் சொல் தன்னுடைய வினைமுற்றுப் பொருளைக் காட்டாமல், அவ்வினையைச் செய்த கருத்தாவைக் குறிக்குமானால் அது வினையாலணையும் பெயராகும்.

(எ.கா) :– செற்றவர், பொறுத்தார், அகழ்வார், இகழ்வார்

வினைமுற்று

பெயர்ச்சொல்லுக்குத் துணையாக நின்று வாக்கியத்தின் பொருளை முடித்துக்காட்ட வருவது வினைமுற்றாகும்.

(எ.கா):– மரம் வீழ்ந்தது, பாண்டியன் படையெடுத்தான், மாடுகள் சென்றன.

இத்தொடர்களில் வீழ்ந்தது, படையெடுத்தான், சென்றன ஆகிய சொற்கள் வினைமுற்றாகும்.

பெயர்ச்சொல்

இடுகுறியாகவோ, காரணம் கருதியோ ஒன்றன் பெயராய் அமைந்த சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல்லின் வகைகள்: பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர்

தொழிற்பெயர்

ஒரு தொழிலைக் குறிக்கும் பெயர் 'தொழிற்பெயர்' எனப்படும். இது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் காட்டாது.

(எ.கா) உண்ணல், ஓடுதல், ஆடுதல்,

50. உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் கூற வந்த கருத்தை உணர வைப்பது ..... அணி ஆகும்.

A) வேற்றுமை அணி

B) பிறிதுமொழிதல்

C) எடுத்துக்காட்டு உவமை அணி

D) இயல்புநவிற்சி அணி

விளக்கம்: விடை: (B)

பிறிதுமொழிதல் அணி :

புலவன் தான் கருதிய பொருளை அப்படியே கூறாமல் அதை விளக்குவதற்கு அதைப் போன்ற பிறிதொன்றினைக் கூறி விளக்குவதற்குப் பிறிதுமொழிதல் அணி அல்லது ஒட்டணி என்று பெயர்.

எ.கா

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்

சால மிகுத்துப் பெயின்.

மென்மையாக இருக்கும் மயிலிறகையும் அளவாக வண்டியில் ஏற்ற வேண்டும். விஞ்சினால் வண்டியின் அச்சு முறியும். இது கூறப்பட்ட கருத்து.

எந்தச் செயலையும் அளவாகச் செய்ய வேண்டும்; அளவுக்கு மீறினால் அழிவு நேரிடும். –இது விளக்க வந்த கருத்து

வேற்றுமை அணி :

ஏதேனும் ஓர் ஒற்றுமையுடைய இரு பொருள்களுக்கிடையே வேற்றுமை கற்பித்துக் கூறல் வேற்றுமை அணி ஆகும்.

(எ.கா)

மோப்பக் குழையும் அனிச்சம், முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து.

ஒற்றுமை : அனிச்ச மலர் மென்மையானது. விருந்தினர் மென்மையான உள்ளமுடையவர்.

வேற்றுமை : அனிச்ச மலரை நுகர்ந்து பார்த்தால்தான் வாடும். ஆனால் முகம் மாறுபட்டு பார்த்தாலே விருந்தினர் வாடிவிடுவர்.

எடுத்துக்காட்டு உவமையணி :

உவமை தனிவாக்கியமாகவும் உவமேயம் தனிவாக்கியமாகவும் இருந்து, உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

(எ.கா):

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத் தூறும் அறிவு

தொட்டனைத் தூறும் மணற்கேணி – உவமை

கற்றனைத் தூறும் அறிவு – உவமேயம்

இவ்விரண்டிற்கும் இடையில் 'போல' என்னும் உவம உருபு மறைந்து வந்து பொருள் தருகிறது.

இயல்பு நவிற்சி அணி

உள்ளதை உள்ளவாறு இயற்கைத் தன்மை மாறாமல் கூறுவது இயல்பு நவிற்சி அணி ஆகும்.

(எ. கா):

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு

ஒரு காலத்தில் தமது துன்பத்தைப் போக்கியவரின் நட்பை ஏழு பிறப்பிலும் ஆன்றோர் நினைத்துக் கொண்டே இருப்பர்.

51. கீழ்க்காணும் சொற்றொடரில் தனிச் சொற்றொடர் எது ?

A) மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான்

B) அழைப்பு மணி ஒலித்ததால் கயல்விழி கதவைத் திறந்தாள்

C) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதி யாயினர்

D) மோரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்

விளக்கம் : **விடை: (D)**

ஒரு எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு முடிவது **தனிச் சொற்றொடர்** எனப்படும். இதில் எச்ச வினைகள் (முற்றுப் பெறாத வினைகள்) இருக்காது; ஒரே ஒரு முதன்மைச் செய்தி மட்டுமே இருக்கும். எ.கா : **மோரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்.**

52. பொன்னகர் – இலக்கணக் குறிப்பு தருக.

A) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

B) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

C) பண்புத் தொகை

D) உவமைத் தொகை

விளக்கம் : **விடை: (A)**

ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து வருவது உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும்.

(எ.கா). பொன்னகர்

இது பொன்னை உடைய நகர் என விரிந்து பொருள் தருகிறது.

பொன், நகர் என்னும் இரு சொற்களுக்கு இடையில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபும் 'கொண்ட' என்னும் சொல்லும் மறைந்து வந்துள்ளன.

53. பொருத்துக :

a) காக்கென்று	**i)** இடைக்குறை
b) கணீர்	**ii)** வினைத் தொகை
c) உய் முறை	**iii)** வேற்றுமைத் தொகை
d) மெய் முறை	**iv)** தொகுத்தல் விகாரம்

A) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)

B) (a)-(iii), (b)-(ii), (c)-(i), (d)-(iv)

C) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

D) (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)

விளக்கம்: **விடை: (A)**

காக்கென்று – தொகுத்தல் விகாரம்

'காக்கவென்று' என்னும் சொல் தொகுத்துச் (சுருங்கி) 'காக்கென்று' என வந்துள்ளது.

கணீர் – இடைக்குறை

சொல்லின் இடையில் உள்ள எழுத்து (கண்ணீர்) குறைந்து வந்துள்ளதால் இது இடைக்குறை எனப்படும்.

உய்முறை – வினைத் தொகை

உய்ந்த முறை, உய்கின்ற முறை, உய்யும் முறை என முக்காலமும் மறை வந்துள்ளது.

மெய் முறை – வேற்றுமைத் தொகை

'மெய்யினது முறை' என ஆறாம் வேற்றுமை உருபு ('அது') மறைந்து வந்துள்ளது.

54. இது செய்வாயா ? என்று வினவிய போது 'நீயே செய்' என்று கூறுவது எவ்வகை விடை ?

A) ஏவல் விடை **B)** மறை விடை

C) இனமொழி விடை **D)** சுட்டு விடை

விளக்கம்: **விடை: (A)**

ஏவல் விடை

ஒரு காரியத்தைச் சொன்னவரிடமே செய்யச் சொல்வது 'ஏவல் விடை ஆகும்.

எ.கா – 'இதனைச் செய்வாயா?' என வினவினால் 'நீயே செய் ' எனக் கூறுவது.

மறைவிடை

ஒரு காரியத்தைச் செய்ய மறுத்துக் கூறுவது மறைவிடை' எனப்படும்.

எ.கா– 'இதனைச் செய்வாயா?' என வினவினால் 'செய்யேன்' என மறுப்பது

சுட்டுவிடை

'இது, அது என்று சுட்டிக்காட்டி பதில் கூறினால் அது 'சுட்டு விடை' எனப்படும்.

எ.கா – 'கரூருக்கு வழி யாது?' என்று கேட்டால் 'இது ' என சுட்டிக் காட்டுவது

இனமொழி விடை

ஒரு பொருளைக் கேட்கும்பொழுது இல்லை என்று கூறாமல் அதற்குப் பதில் வேறு பொருள் உள்ளது எனக் கூறுவது.

எ.கா – "துவரை உள்ளதா?' என்ற வினாவிற்கு உளுந்து உள்ளது' என விடை கூறுவது.

55. கீழ்க்காணும் தொடரில் சரியான மரபுத் தொடர் எது ?

A) கோவிந்தன் சோறு சாப்பிட்டு பால் பருகினான்

B) கோவிந்தன் சோறு உண்டு பால் குடித்தான்

C) கோவிந்தன் சோறு தின்று பால் பருகினான்

D) கோவிந்தன் சோறு உண்டு பால் பருகினான்

விளக்கம்: **விடை: (D)**

சரியான மரபுத் தொடர்

கோவிந்தன் சோறு உண்டு பால் பருகினான்

56. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்.

இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி :

A) பிறிதுமொழிதல் அணி **B)** உவமையணி

C) உருவக அணி **D)** வேற்றுமை அணி

விளக்கம்: **விடை: (A)**

புலவர் தான் கூற வந்த கருத்தை நேரடியாகக் கூறாமல், அதற்கு உவமையாகும் வேறொரு பொருளை மட்டும் கூறி, அதன் மூலம் கருத்தைப் புரிய வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

குறளின் பொருள்:

மயிலிறகு மிகவும் லேசானதுதான். ஆனால், அதனை அளவுக்கு அதிகமாக வண்டியில் ஏற்றினால், அந்த வண்டியின் அச்சு முறிந்துவிடும்.

வெளிப்படையாகக் கூறப்படும் உவமை:

மயிலிறகு அதிகம் ஏற்றினால் வண்டியின் அச்சு முறியும்.

மறைமுகமாக உணர்த்தும் கருத்து:

பகைவர்கள் தனித்தனியாகப் பார்க்கும்போது எளியவர்களாக (வலிமையற்றவர்களாக) தோன்றலாம். ஆனால், அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்தால், எவ்வளவு வலிமைமிக்க அரசராக இருந்தாலும் அவரை அழித்துவிடுவார்கள்.

57. ஈரெழுத்துச் சொற்களாக அமையும் குற்றியலுகரம் எது ?

a) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்
b) இடைத் தொடர்க் குற்றியலுகரம்
c) நெடில் தொடர்க் குற்றியலுகரம்
d) வன் தொடர்க் குற்றியலுகரம்

A) (a) மட்டும் சரி **B)** (c) மட்டும் சரி
C) (a) (c) சரி **D)** (a) (b) (c) (d) சரி

விளக்கம்: **விடை: (B)**

குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவற்றுள் ஈரெழுத்துச் சொற்களாக அமைவது நெடில்தொடர்க் குற்றியலுகரம் மட்டுமே ஆகும்.

நெடில்தொடர்க் குற்றியலுகரம்:

தனி நெடில் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ஆகும். இவை எப்போதும் இரண்டு எழுத்துக்களைக் கொண்ட (ஈரெழுத்து) சொற்களாக மட்டுமே வரும்.

எடுத்துக்காட்டுகள்:

பாகு (பா + கு) – 'பா' என்பது நெடில் எழுத்து.
காது (கா+து) – 'கா' என்பது நெடில் எழுத்து.
ஆறு (ஆ + று) –'ஆ' என்பது நெடில் எழுத்து.

மற்ற குற்றியலுகரங்கள்:

உயிர்த்தொடர், வன்தொடர், மென்தொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர் ஆகிய அனைத்தும் இரண்டிற்கும்மேற்பட்ட எழுத்துக்களைக் கொண்ட சொற்களாகவே வரும்.

58. "நந்தவனம் கண் திறந்து
நற்றமிழ்ப் பூ எடுத்து"
இப்பாடல் அடிகளில் இடம் பெற்றுள்ள சொற்கள் ?

A) இடைச்சொற்கள், வினைச்சொற்கள்
B) பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள்
C) பெயர்ச்சொற்கள், இடைச்சொற்கள்
D) உரிச்சொற்கள், பெயர்ச்சொற்கள்

விளக்கம்: **விடை: (B)**

"நந்தவனம் கண் திறந்து
நற்றமிழ்ப் பூ எடுத்து"

இப்பாடல் வரிகளில் உள்ள சொற்களை ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்த்தால், அவை பெயர்ச்சொற்களாகவும் வினைச்சொற்களாகவும் இருப்பதை அறியலாம்:

பெயர்ச்சொற்கள்: ஒரு பொருளின், இடத்தின் அல்லது காலத்தின் பெயரைக் குறிக்கும் சொற்கள் பெயர்ச்சொற்கள் ஆகும்.

நந்தவனம் – பூஞ்சோலையைக் குறிக்கும் பெயர்ச்சொல்.
கண் – உறுப்பைக் குறிக்கும் பெயர்ச்சொல்
நற்றமிழ் (நன்மை + தமிழ்) –மொழியைக் குறிக்கும் பெயர்ச்சொல்.
பூ– மலரைக் குறிக்கும் பெயர்ச்சொல்.

வினைச்சொற்கள்: ஒரு செயலை அல்லது வினையைக் குறிக்கும் சொற்கள் வினைச்சொற்கள் ஆகும்.

திறந்து – 'திறத்தல்' என்ற வினையைக் குறிக்கும் எச்ச வினைச்சொல்.
எடுத்து – 'எடுத்தல்' என்ற வினையைக் குறிக்கும் எச்ச வினைச்சொல்.

59. அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கின்றேன். இத்தொடரில் வரும் ஆகுபெயரினைத் தேர்ந்தெடுக்க.

A) பொருளாகு பெயர் **B)** எண்ணலளவை ஆகுபெயர்
C) தொழிலாகு பெயர் **D)** கருத்தாவாகு பெயர்

விளக்கம்: **விடை: (D)**

ஆகுபெயர்

ஒரு பொருளின் இயற்பெயர் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குப் பெயராகி வருவது ஆகுபெயராகும்.

கருத்தாவாகு பெயர்

அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கின்றேன்" என்ற தொடர், அறிஞர் அண்ணா என்னும் மனிதரை நேரடியாகப் படித்ததைக் குறிக்கவில்லை.

உண்மையான அர்த்தம்: அவர் இயற்றிய நூல்களைப் படித்தேன் என்பதைக் குறிக்கிறது. இவ்வாறு ஒரு நூலாசிரியரின் (கருத்தாவின்) பெயர், அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருவது கருத்தாவாகு பெயர் எனப்படும்.

பொருளாகு பெயர்

தாமரை மலர்ந்தது. (தாமரை என்பது வேர், கொடி, இலை, பூ அனைத்தும் சேர்ந்த முழுப்பொருள். ஆனால் இங்கு பூவை மட்டும் குறிக்கின்றது

தொழிலாகு பெயர்

வளவன் வற்றல் உண்டான். (வற்றல் என்பது தொழிலின் பெயர். வற்றுதலை உடைய உணவுக்குப் பெயராகி வந்தது)

எண்ணலளவை ஆகுபெயர்

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி. (இங்கு நாலும், இரண்டும் என்பது முறையே நாலடியாரையும், திருக்குறளையும் குறிக்கின்றது)

60. மூவர் என்னும் சொல்லின் சரியான பகுபத அமைப்பு முறை :

A) மூ + வ் + அர் **B)** மூவ் + அர்
C) மூன்று + வ் + அர் **D)** மூன்று + ஆவ்+அர்

விளக்கம்: **விடை: (C)**

'மூவர்' என்னும் சொல் ஒரு பெயர் பகுபதம் ஆகும்.

பகுபத உறுப்பிலக்கணப்படி பிரிக்கும் முறை

'மூவர்' என்பதில் முதன்மைப் பொருள் தரும் அடிச்சொல் 'மூன்று' என்ற எண்ணிக்கையாகும். புணர்ச்சி விதியின்படி 'மூன்று' என்பது 'மூ' எனத் திரிந்து நிற்கிறது.

வ் (சந்தி/உடம்படுமெய்): நிலைமொழியின் ஈற்றில் 'மூ' (உயிர் எழுத்து) இருப்பதாலும், வருமொழியின் முதலில் 'அர்' (உயிர் எழுத்து) இருப்பதாலும், இரண்டு உயிரெழுத்துகளை இணைக்க 'வ்' என்ற உடம்படுமெய் தோன்றுகிறது.

அர் (விகுதி) : இது பலர்பாலக் குறிக்கும் பெயர் விகுதி ஆகும்.

எனவே, **மூன்று + வ் + அர் = மூவர்** எனப் பிரியும்.